**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.113/2013 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 |
| Name : | திரு. வினோத்குமார், கிளை மேலாளர் |
| Father's Name/Husband Name: | திரு. சந்திரசேகரன் |
| Village : | வேப்பூர் |
| Taluk : | குன்னம் |
| Age : | 35/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 23.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

**சாட்சியானவர் கு.வி.மு.ச. பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது வேப்பூரில் உள்ள இந்தியன் ஓவர்சிஸ் வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிகிறேன். என்னிடம் காட்டப்படும் IC 2077887189, IC 2006853141, IC 2006870622 and IC 2007909436 ரெமிட்டன்ஸ் எண்களின்படி ராஜதேவி என்பவர் சிங்கப்பூரில் இருந்து மாயவேல் என்பவருக்கு அவரது வங்கிக் கணக்கு எண் 5030 என்ற எண்ணிற்கு பணம் அனுப்பியுள்ளார். மேற்படி ராஜதேவி என்பவர் ரூபாய் 14000/– ரூபாய் 14000, ரூபாய் 9000 மற்றும் ரூபாய் 29000 பணத்தை மாயவேல் என்பவரின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பியுள்ளார். மேற்படி **ரெமிட்டன்ஸ் சலான்கள் முறையே அ.சா.ஆ13, அ.சா.ஆ14, அ.சா.ஆ15 மற்றும் அ.சா.ஆ16 ஆகும்**. மேலும், குணசாலன் என்ற நபர் மாயவேலுக்கு ரூபாய் 7441.25 பைசா வரைவோலை கொடுத்து அந்த பணமானது மாயவேலின் இந்தியன் ஓவர்சிஸ் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. அந்த **ஆவணமானது அ.சா.ஆ17 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும், குணசாலன் என்ற நபர் மாயவேலுக்கு ரூபாய் 5026.46 பைசா வரைவோலை

கொடுத்து அந்த பணமானது மாயவேலின் இந்தியன் ஓவர்சிஸ் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணமானது **அ.சா.ஆ18 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் பணிபுரியும் வேப்பூர் இந்தியன் ஓவர்சிஸ் வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்த திரு. கண்ணன் என்பவர் பணியிலிருந்து ஓய்வு பெற்று தற்போது எங்கு இருக்கிறார் என்ற விவரம் தெரியவில்லை. நான் மேற்கண்ட ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்கண்ட வழக்கு சம்மந்தமாக அ.சா.1 விஜயா எதிரி மாயவேலின் வங்கி கணக்கிற்கு நேரடியாக பணம் எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். வங்கியின் பராமரிப்பு ஆவணங்களின் படி சாட்சியம் அளிக்கவில்லை என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்களின் படி சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கின் விவரங்கள் நேரடியாக எனக்கு தெரியாது என்றாலும், கிளை மேலாளர் கண்ணன் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதியிலிருந்து இன்றுவரை Ledgerல் இவ்வழக்கு சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட விவரங்கள் கொண்டு வந்து நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் விவரம் எனக்கு தெரியாமல் ஏற்கனவே இருந்த கிளை மேலாளர் தாக்கல் செய்த ஆவணங்களின் படி அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.